بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2:10, ரஜப், 1427, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, E-Mail : suvanam@gmail.com

## ஜனாஸாவை சுமந்து செல்லல்

**- இப்ராஹிம் மதனி.M.A**

சென்ற இதழில் மையித்தை குளிப்பாட்டுவதுபற்றித் தெரிந்து கொண்டோம், இந்த இதழில் மையித்தை சுமந்து செல்லுதல் பற்றித் தெரிந்து கொள்வோம். ஒருவர் மரணித்தால் அந்த ஜனாஸாவை சுமந்து செல்வதும் அதை பின் தொடர்ந்து செல்வதும் முஸ்லிம்கள் மீது கடமையாகும். ஒரு முஸ்லிம் மையத்திற்காக மற்ற முஸ்லிம்கள் மீதுள்ள கடமையுமாகும். இதைக் குறிக்கும் ஹதீஸ் பின்வருமாறு.

• ஒரு முஸ்லிமிற்கு மற்ற முஸ்லிமின் மீதுள்ள கடமைகள் ஐந்து, ஸலாம் கூறப்பட்டால் பதில் கூறுதல், நோயாளியைக் கண்டு நலம் விசாரித்தல், (இறந்துவிட்டால்) ஜனாஸாவில் கலந்து கொள்ளுதல், விருந்துக்கு அழைக்கப்பட்டால் ஏற்றுக் கொள்ளல், தும்மியவர் "அல்ஹம்துலில்லாஹ்" என்று கூறினால் பதில் கூறுதல் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

**ஜனாஸாவைத் தொடர்வதில் இரண்டு வகை உண்டு**

• மரணித்தவரின் வீட்டிலிருந்து தொழ வைக்கும் இடம் வரை தொடர்தல்.

• வீட்டிலிருந்து அடக்கம் செய்யும் வரை தொடர்தல், இவ்விரண்டு முறைகளையும் நபி(ஸல்) அவர்கள் செய்துள்ளார்கள்.

அபூ ஸயீதுல் குத்ரி(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த புதிதில் எங்களில் யாருக்காவது மரண வேளை வந்தால் நபி(ஸல்) அவர்களுக்கு அறிவிப்போம். அவர்கள் மரணிப்பவருக்காக பிழை பொறுக்கத் தேடுவார்கள். அவர் மரணித்து விட்டால் அவரை நல்லடக்கம் செய்யும் வரை கூடவே இருப்பார்கள். சிலவேளை மரணப் போராட்டம் நீடித்து விட்டால் நெடு நேரமாக அங்கு நபியவர்களைக் காக்க வைப்பது எங்களுக்கு வேதனையைத் தந்து விடும். இனிமேல் ஒருவர் மரணித்த பின்புதான் நபியவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என தீர்மானித்து அப்படியே செய்தோம். ஒருவர் மரணித்த பின்பே நபி(ஸல்) அவர்களிடம் கூறுவோம். நபி(ஸல்) அவர்கள் வந்து மரணித்தவருக்கு தொழுகை நடத்தி விட்டு வீட்டுக்குச் சென்று விடுவார்கள். சிலவேளை அவரை அடக்கம் செய்யும் வரை கூடவே இருப்பார்கள். இதுவும் நபி(ஸல்) அவர்களுக்கு கஷ்டம் கொடுப்பதாக எண்ணிய நாங்கள் ஜனாஸாவை தூக்கிச் சென்று நபி(ஸல்) அவர்களின் வீட்டருகில் வைத்து விட்டு நபி(ஸல்) அவர்களுக்குக் கூறுவோம். நபி(ஸல்) அவர்கள் தொழுகை நடத்துவார்கள். இதுவே கடைசி வரை பின்பற்றப்பட்ட முறையாகும்.

***ஆதாரம் : ஹாகிம், அஹ்மத், பைஹகி***

இதில் இரண்டாவது வகை சிறந்தது என்பதில் சந்தேகமில்லை. பின்வரும் ஹதீஸ் அதை தெளிவு படுத்துகின்றது.

"எவர் ஒரு ஜனாஸாவில் கலந்து கொண்டு நம்பிக்கையுடனும், நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்துடனும், தொழுகை நடத்தும் வரை கூடவே செல்வாராயின் அவருக்கு உஹுத் மலையளவு நன்மை கிடைக்கும். அந்த ஜனாஸாவை நல்லடக்கம் செய்யும் வரை தொடர்வாராயின் இரண்டு உஹுத் மலையளவு நன்மை கிடைக்கும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

ஜனாஸாவை பெண்கள் தொடரக்கூடாது, காரணம் நபி(ஸல்) அவர்கள் அதைத் தடுத்துள்ளார்கள். உம்மு அதிய்யா(ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் இதற்கு ஆதரமாக இருக்கின்றது. "

"நாங்கள் ஜனாஸாவை தொடர்ந்து செல்லக்கூடாது என்று நபி(ஸல்) அவர்களால் தடுக்கப்பட்டுள்ளோம். எங்களைப்

***-(தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க)***

## உள்ளே

**இஸ்ரேலின் பயங்கரவாதம் - 4**
**கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் (தொடர்) - 5**
**உங்களுக்குத் தெரியுமா? - 7**
**மனிதகுல எதிரிகள் - 7**
**பொருளீட்டல் பற்றி இஸ்லாம் (தொடர்) -10**
**குறுக்கெழுத்துப் போட்டி- 12**

## செயற்கைக் கோள்

**-அக்பர் பாட்சா**

இந்தியாவின் தென்மேற்கு கடல்பகுதியில் 300 கி.மீ தொலைவில் காற்றழுத்தம் காரணமாக புயல் ஒன்று மையம் கொண்டுள்ளது. அது வடகிழக்காக 100 கி.மீ வேகத்தில் கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்பது போன்ற தகவல்களை அவ்வப்போது தொலைக் காட்சிகளிலும் வானொலியிலும் நாம் கேட்பது வழக்கம். இந்த இயற்கை மாற்றம் தொடர்பான தகவல்கள் எப்படி நமக்குக் கிடைக்கிறது?

வடகொரியா ஏவுகணை சோதனை செய்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாகவும் இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரத்திற்குள், அந்தச் சோதனையை செய்யும் சாத்தியம் இருப்பதாக அமெரிக்க அதிபருக்கு அந்நாட்டின் உளவு நிறுவனம் தகவல் ஒன்றை அளிக்கிறது. இது எப்படி சாத்தியம்? இந்தியத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பல நிகழ்ச்சிகள் நேரடியாக சவுதி அரேபியாவில் பார்க்கின்றோம் இதுவும் எப்படிச் சாத்தியம்?

இவை அனைத்தும் வானிலே செலுத்தப்பட்ட செயற்கை விண்கோள்கள் அல்லது விண்கலங்கள் என்று அழைக்கப்படும் அறிவியல் சாதனத்தின் காரணமாகத்தான். இந்த விண்கோள்கள் எவ்வாறு செயல்படுகிறது? அவைகள் விண்வெளிக்கு எப்படி அனுப்பி வைக்கப்படுகின்றன? என்பதைப் பார்ப்போம்.

***(தொடர்ச்சி – 3 ஆம் பக்கம் பார்க்க..)***

போகவே கூடாது என நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள் என அறிவித்தார்கள்."

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

➢ ஜனாஸாவைத் தூக்கிச் செல்லும் போது பைத்துக்கள் ஓதுவது, ஸலவாத்து ஓதுவது, குர்ஆனை ஓதிச்செல்வது போன்றவைகளை முற்றாகத் தவிர்க்க வேண்டும். காரணம் இவைகள் நபி(ஸல்) அவர்களின் காலத்தில் செய்யப்படாதவையாகும்.

ஜனாஸாவுக்கு முன்னால் சப்தமிட்டு திக்ரு செய்து கொண்டும், குர்ஆன் வசனங்களை ஓதிக்கொண்டும் செல்லக்கூடாது. இது "பித்அத்" ஆகும். ஜனாஸாவுடன் சப்தமிட்டு (திக்ருகள் செய்து) செல்வதை நபித்தோழர்கள் வெறுத்தனர் என்று கைஸ் இப்னு உப்பாதத்(ரலி) அறிவிக்கிறார்கள்.

***ஆதாரம் : பைஹகி***

இப்படி சப்தமிட்டுச் செல்வது கிறிஸ்தவர்களுக்கு ஒப்பான செயலாகும். அவர்கள் மரண ஊர்வலத்தில் இன்ஜீலிலிருந்து சில வசனங்களை சத்தமிட்டு சோக கீதமாய்ப் பாடிச் செல்வார்கள். மேலும் சிலர் இசைக்கருவிகள் மூலமும் சோக இசையை மீட்டுவார்கள். இவற்றை முஸ்லிம்களில் சிலரும் பின்பற்றி தங்களின் ஜனாஸாவைக் கொண்டு செல்கின்றனர். இது மாபெரும் தவறாகும்.

இமாம் நவவீ(ரஹ்) அவர்கள் தமது ""அல் அக்தார்" எனும் நூலில் கூறுகின்றார்கள் ""அறிந்து கொள்! ஜனாஸாவுடன் செல்பவர்கள் மௌனமாகச் செல்வதே சரியானதும் ஏற்புடையதுமாகும். குர்ஆன் வசனங்களை ஓதிக் கொண்டும் திக்ருகள் செய்து கொண்டும் சத்தத்தை உயர்த்தக் கூடாது. அமைதியாகச் செல்வதன் மூலம் ஜனாஸாவைப்பற்றிய சிந்தனையும் மரணத்தைப் பற்றிய சிந்தனையும் ஏற்பட வழி பிறக்கிறது. இதுதான் இந்த இடத்தில் தேவையாகிறது. இதுதான் உண்மை நிலை.

இமாம் பைஹகி(ரஹ்) அவர்கள் கைஸ் இப்னு உப்பாத்(ரலி) அவர்கள் மூலம் அறிவித்துள்ள செய்தி நான் கூறியதற்கு ஆதரமாகவே இருக்கிறது. ஜனாஸாவின் போது அறிவிலிகள் கிராஅத் ஓதிக் கொண்டும் அதனை நீட்டி இழுத்துக் கொண்டும் திமிஷ்கில்(டமஸ்கஸில்) செயற்படுவது தடுக்கப்பட்ட செயலாகும். மார்க்க அறிஞர்களின் ஒருமித்த தீர்ப்பின்படி ஹராமான செயலாகும். இதன் உண்மை நிலையையும் இவ்வாறு குர்ஆனை ஜனாஸாவில் பயன்படுத்துவதன் கேட்டையும், அபாயகரமான செயலையும் "அதாபுல் கிராஅத்" என்ற நூலில் எழுதியுள்ளேன். எந்த மாக்க அறிஞரும் இதனை ஆட்சேபிக்கவுமில்லை மறுப்புத்தரவுமில்லை எனக் கூறியுள்ளார்கள். ஆகவே நாமும் பிறர் ஜனாஸாக்களை தூக்கிச் செல்லும் போது அமைதியாக, எந்த சத்தத்தையும் வெளிப்படுத்தாமல் மரண சிந்தனையை ஏற்படுத்தியவர்களாகச் செல்வதே நபிவழியாகும்.

➢ ஜனாஸாவை தூக்கிச் செல்பவர்கள் வேகமாகச் செல்ல வேண்டும்.

அபூஹுஃரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஜனாஸாவை வேகமாகக் கொண்டு செல்லுங்கள். ஜனாஸாவுக்குரியவர் நல்லவராக இருந்தால் அவரைச் விரைந்து நல்லடக்கத்திற்குக் கொண்டு செல்லுங்கள், என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

ஸாதுல் மஆத் என்ற புத்தகத்தில் இப்னுல்கையிம்(ரஹ்) அவர்கள் இன்று மனிதர்கள் (முஸ்லிம்கள்) ஜனாஸாவைக் கொண்டு செல்லும்போது மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைப்பது நபிவழிக்கு மாற்றமானது மட்டுமல்ல யூதர்களுக்கு ஒப்பான பித்அத்துமாகும் எனக் கூறியுள்ளார்கள்.

➢ ஜனாஸாவுடன் செல்பவர்கள் ஜனாஸாவுக்கு முன்னாலும் பின்னாலும் வலது பக்கமும் இடது பக்கமும் செல்வது ஆகும். வாகனத்தில் செல்பவர்கள் ஜனாஸாவுக்குப் பின்னால்தான் செல்ல வேண்டும்.

"முகீரா இப்னு ஹுஃம்ரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். வாகனத்தில் ஜனாஸாவுடன் செல்பவர் பின்னால் செல்ல வேண்டும். நடந்து செல்பவர் ஜனாஸாவுக்குச் சமீபமாக எப்பக்கமும் செல்லலாம். இறந்த குழந்தையும் தொழுவிக்கப்படல் வேண்டும். அதன் பெற்றோருக்குப் பிழை பொறுக்கும்படியும் அருள் செய்யும்படியும் பிரார்த்திக்க வேண்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்"

***ஆதாரம் : அபூதாவூத், நஸாயி, இப்னு ஹிப்பான்***

➢ ஜனாஸாவுக்கு முன் செல்வதை விட பின் செல்வதே சிறந்ததாகும்.

"ஜனாஸாவுக்குப் பின்னால் செல்வது முன்னால் செலவதை விடச் சிறந்ததாகும். ஜமாஅத்தாகத் தொழுவது தனித்துத் தொழுவதை விடச் சிறந்ததாகும் என அலி(ரலி) அவர்கள் கூறியிருப்பது இதைத் தெளிவுபடுத்துகின்றது."

➢ ஜனாஸாவுடன் செல்பவர்கள் வாகனத்தில் செல்வதை விட நடந்து செல்வதே சிறந்ததாகும்.

"தௌபான்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ஒரு ஜனாஸாவில் கலந்து கொள்ள நபி(ஸல்) அவர்கள் வந்த போது அவர்கள் ஏறிச்செல்ல ஒரு வாகனம் கொண்டு வரப்பட்டது. நபி(ஸல்) அவர்கள் அதில் ஏறிச் செல்ல மறுத்தவிட்டார்கள். ஜனாஸாவை அடக்கம் செய்து விட்டு திரும்பும் போது ஒரு வாகனம் நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. நபி(ஸல்) அவர்கள் அதில் ஏறிக்கொண்டார்கள். அல்லாஹ்வின் தூதரே! ஜனாஸாவுடன் வரும் போது வாகனத்தில் ஏற மறுத்துவிட்டீர்கள். திரும்பும்போது ஏறிக் கொண்டீர்களே ஏன்? என கேட்கப்பட்டது. (இந்த ஜனாஸாவுடன்) வானவர்கள் நடந்து வருவதைக் கண்டேன். அவர்கள் நடந்து வரும்போது நான் வாகனத்தில் வர விரும்பவில்லை. அடக்கம் செய்தவுடன் அவர்கள் சென்றுவிட்டார்கள். நான் வாகனத்தில் ஏறிக்கொண்டேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : அபூதாவூத், பைஹகி***

➢ ஜனாஸாவை அடக்கம் செய்துவிட்டுத் திரும்பும் போது வாகனத்தில் ஏறிக் கொள்வது ஆகுமானதாகும்.

இதற்கு ஆதாரமாக முன் கூறப்பட்ட தௌபான்(ரலி) அவர்கள் அறிவிக்கும் "ஹதீஸுடன் ஜாபிர்(ரலி) அவர்கள் அறிவிக்கும் "ஹதீஸும் அதைத் தெளிவு படுத்துகின்றது.

"ஜாபிர் இப்னு ஸம்ரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் சென்றிருந்த வேளையில் (மரணமடைந்த) இப்னு தஹ்தாஹ்(ரலி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள்தொழுகை நடத்தினார்கள் பின்னர் அடக்கம் செய்யும் இடம் வரை எங்களோடு நடந்து வந்தார்கள். திரும்பும் போது (கடிவாளமில்லாத) சேணமில்லாத ஒரு குதிரை கொண்டுவரப்பட்டு நபி(ஸல்) அவர்களிடம் நிறுத்தப்பட்டது. (வேகமாக ஓட முடியாதவாறு) அதன் காலை ஒருவர் கட்டிவிட்டார். நபி(ஸல்) அவர்கள் அதன் மீது ஏறித் திரும்பினார்கள். அது குதித்து குதித்து நடந்து சென்றது. நாங்கள் அதன் பின்னால் ஓடிக் கொண்டு வந்தோம். அவ்வேளை எத்தனையோ (பழக்)குலைகள் இப்னு தஹ்தாவுக்காக சுவர்க்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கின்றன என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : முஸ்லிம், அபூதாவூத்***

➢ஜனாஸாவைச் சுமந்தவர்கள் ஒளுச் செய்வது விரும்பத்தக்கதாகும்.

எவர் மையத்தை குளிப்பாட்டினாரோ அவர் குளிக்கட்டுமாக! எவர் மையத்தை சுமந்து சென்றாரோ அவர் ஒளுச் செய்யட்டுமாக! என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி***

***(தொடரும் இன்ஷா அல்லாஹ்)***

***( முதல் பக்கத் தொடர்ச்சி . செயற்கைக் கோள் )***

**விண்கோள்கள்**

பெரிய அமைப்பு அல்லது தொகுப்பை, தொடர்ந்து சுற்றிவரும் ஒன்றிணைக்கப்பட்ட சிறிய தொகுதி அல்லது பொருளுக்கு பெயர்தான் விண்கோள். இது இரண்டு வகைப்படும். ஒன்று இயற்கை விண்கோள், மற்றொன்று செயற்கை விண்கோள். இயற்கை விண்கோள்களுக்கு உதாரணம், சூரியனைச் சுற்றி வரக்கூடிய அனைத்து கோள்களும். பூமியைச் சுற்றிவருகின்ற சந்திரனையும் விண்கோள் என்றுதான் அழைக்கப்படும்.

செயற்கை விண்கோள் என்பது மனிதனால் வடிவமைக்கப்பட்டு விண்வெளிக்கு அனுப்பிவைக்கப்பட்ட செயற்கை சாதனமாகும்.

**செயற்கை விண்கோள்கள்**

நம் எல்லோருக்கும் தெரியும், வானில் எய்தப்படுகின்ற எப் பொருளாக இருந்தாலும், புவியின் ஈர்ப்பு சக்தியின் காரணமாக அவைகள் பூமிக்கு திரும்ப வந்துவிடும். ஆனால் விண்கோள்கள் புவியின் ஈர்ப்பு சக்தியைக் கணக்கிட்டு, பூமிக்கு திரும்ப வராமலும் அதே நேரம் பூமியின் இழு சக்தியின் நீள்வட்டப் பாதையின் உள்ளிருந்தே பூமியை சுற்றிவரும் தொலைவிற்குள் செலுத்தப்படுகின்றன. குறைந்தப் பட்சம் 200 கி.மீ தொலைவிலிருந்து அதிகபட்சமாக 35,000 கி.மீ தொலைவிற்குள்ளேயே பெரும்பாலும் எல்லாவிதமான செயற்கைக் கொள்களும் சுற்றிவரச் செலுத்தப் படுகின்றன.



விண்கோள்களை புவியின் ஈர்ப்பு சக்தியைத் தாண்டி செலுத்துவதற்கு தேவைப்படும் சாதனத்தின் பெயர் ராக்கெட் அல்லது ஏவுகணை என்று பெயர். இது பொதுவாக விண்கலங்களை அல்லது செயற்கை கோள்களை தேவையான உயரத்திற்கு சுமந்துச் சென்று வானில் விட்டுவிடும். ஏவுகணைகள் உயரத்திற்கு ஏற்றார்போல் பலவிதமான அடுக்குகளாக செயல்படும். உதாரணத்திற்கு மூன்று அல்லது அதற்கு அதிகமான ஏவுகணைகள் செயற்கைகோளை சுமந்து கொண்டு பூமியிலிருந்து புறப்படும். ஒவ்வொரு ஏவுகணையும் அதனுள் செலுத்தப்பட்ட எரிபொருள் தீரும் வரை விண்கலத்தை சுமந்து சென்று கொண்டிருக்கும். முதலாவது ஏவுகணையின் எரிபொருள் தீர்ந்துவிடும் பட்சத்தில் இரண்டாவது ஏவுகணை செயல்பட ஆரம்பித்துவிடும். இரண்டாவது ஏவுகணையின் எரிபொருள் தீரும்பொழுது, மூன்றாவது ஏவுகணை செயல்படத் தொடங்கிவிடும். ஒவ்வொரு ஏவுகனையும், ஒன்று முடிவுறுவதற்கு முன்னதாக தானியங்கி முறையில் தொடர்ந்து செயல்பட்டு குறிப்பிட்ட உயரத்திற்கு விண்கோளை எடுத்துச் சென்று விட்டுவிடும்.

மேலே உள்ள புகைப்படம் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஏவுகணைத் தளம் ஒன்றிலிருந்து புறப்பட இருக்கின்ற ஏவுகணைகள் மற்றும் (சுமந்து நிற்கின்ற) விண்கோள்.

ஏவுகணைகள் வானில் அதிக தொலைவு செல்வதற்கு ஏதுவாக இரண்டுவிதமான எரிபொருள்களை விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர். ஒன்று நீரியலானது (liquid) மற்றொன்று திடமானது (solid). நீரியலில் ஹைட்ரஜன், கெரசின் மற்றும் ஆக்சிஜன் மூன்றும் பயன்படுத்தப்படுகின்றன. திட எரிபொருளில் அலுமினிய மாவும், அம்மோனியம் நைட்ரேட் அல்லது அம்மோனியம் பெர்குலேரேட் என்ற வேதியியல் பொருட்களை பயன்படுத்துகின்றனர். திட எரிபொருட்களே ஆபத்தில்லாமல் ஏவுகணையை செலுத்துவதற்கு சிறந்தது.

**விண்கோள்கள் பூமியைச் சுற்றி வருதல்**

விண்கோள்கள் இரண்டு விதமாக பூமியைச் சுற்றி வருகின்றன. ஒன்று ஈக்குவேட்டர் ஆர்பிட் என்று அழைக்கப்படும் கிழக்கு மற்றும் மேற்கு நீள்வட்டப் பாதையில் சுற்றி வருபவை. இன்னொன்று போலார் ஆர்பிட் என்று அழைக்கப்படும் வடக்கு மற்றும் தெற்கு சுற்றுவட்டப் பாதையில் தொடர்ந்து சுற்றிவரும்.

ஈக்குவேட்டர் பாதையில் சுற்றிவரும் விண்கோள்கள் 36,000 கி.மீ உயரம் வரை செலுத்தப்படும். ஈக்குவேட்டர் விண்கோள்கள் சற்று அதிகமான உயரத்தில் பூமியை ஒரு சுற்றுவருவதற்கு ஏறக்குறைய 24 மணிநேரம் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு தகுந்தார்போல் உள்ள வேகத்திலும் உயரத்திலும் சுற்றிவரச் செய்யப்படும். இதன் உயரம் ஏறக்குறைய 35,900 கி.மீ. தெலைவாகும். இப்படி சுற்றிவரும் விண்கோளை ஜியோஸ்டேஷனரி சேட்டிலைட் என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். ஒருவகையில் இது பூமியைச் சுற்றிவரும் விண்கோளைப் போன்றில்லாமல் ஒரு குறிப்பிட்ட பூமியின் மேல்பரப்பில் எப்போதும் நின்று கொண்டிருப்பதுபோல் தோன்றும். இவ்வாறு ஒரே நிலையில் நிற்பதுபோல் தோன்றும் விண்கோள்களின் உதவியால்தான் தொலை தொடர்பு மற்றும் தொலைக் காட்சி சாதனங்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு ஒளி மற்றும் ஒலிபரப்படுவதும் மற்றும் பெறுவதுமான செயல்களை செய்கின்றன. மேலும் இந்தவகை கோள்களே புயல், இயற்கை சீரழிவுகளுக்கான எச்சரிக்கைகள் செய்யவும், வானிலை ஆராய்ச்சிகளுக்கும், பூமியின் நிலவளங்கள், கனிமங்கள் மற்றும் நீர் நிலைகளை அறிந்துக் கொள்ளவும் உதவுகின்றன.

போலார் ஆர்பிட் என்று அழைக்கப்படும் வட்டப் பாதையில் சுற்றிவரும் செயற்கை கோள்கள் பூமிக்கு அருகாமையிலேயே சுற்றிவரும் உயரத்தில் அதாவது 200 கி.மீ தொலைவில் மட்டுமே செலுத்தப்படும். இவைகள் பெரும்பாலும் பூமியை ஒரு சுற்றுவர இரண்டு மணி நேரமே எடுத்துக் கொள்ளும், அது மட்டுமல்லாமல் அதிகமான இடங்களையும் சுற்றி வந்துவிடும். இவ்வகையான செயற்கை கோள்கள் பெரும்பாலும் உளவு பார்க்கும் பணிக்காகவே செலுத்தப்படும். வசதிமிக்க நாடுகள் இது போன்ற செயற்கை கோள்களை எதிரி நாடுகள் மற்றும் தனக்குப் பிடிக்காத நாடுகளின் ராணுவ மற்றும் பொருளாதார செயல்பாடுகளை உளவு பார்க்கும் நோக்கத்துடன் மட்டுமே வானில் செலுத்தப்படுகின்றன. போலார் ஆர்பிட்டில் சுற்றிவரும் கோள்கள் சூரிய வெளிச்சத்தைக் கணக்கில் கொண்டு பகல் முழுக்க தான் சுற்றிவரும் பகுதியை ஸ்கேனிங் செய்தபடி நிலக்கட்டுப்பாட்டுத் தளத்தினுடன் தொடர்பு கொண்டு புகைப்படங்களையும், இன்னும் பிற ரேடார் சமிக்கைகளையும் அனுப்பிக் கொண்டிருக்கும். போர்க்காலங்களில் இந்த செயற்கைக் கோள்களின் செயல்பாடுகள் மிகவும் ஏதுவாக இருக்கும். ●

# இஸ்ரேலின் பயங்கரவாதம்

இந்தப் போர் இப்படியே தொடர்ந்தால் லெபனான் என்ற நாட்டின் சில பகுதிகள் முற்றிலும் அழிந்து போய் விடுமோ என்று அச்சப்படும் வகையில் அங்கிருந்து ஊடகங்களில் வரும் படங்களும், தொலைக்காட்சிப் படங்களும் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. இஸ்ரேல், லெபனான் மக்கள் மீது தொடுத்திருக்கும் பயங்கரவாதத்தை கோர முகத்தை உணர்த்துவதாகவே இந்தத் தாக்குதல் உள்ளது.

எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் ஒரு நாட்டின் உள்கட்டமைப்பு மீதோ, சிவிலியன் பகுதிகள் மீதோ இவ்வளவு பெரிய தாக்குதலை இது வரை நடத்தியதில்லை. இஸ்ரேல் என்ற அரசாங்கம் இதனை செய்வதால் இதற்கு "இராணுவ நடவடிக்கை", "Deterrent Strikes" என்றெல்லாம் பெயர் சூட்டப்படுகின்றன. ஒரு அரசாங்கம் நடத்தும் தாக்குதல் என்றாலும் சரி, தீவிரவாத குழுக்கள் நடத்தும் தாக்குதல் என்றாலும் சரி பொதுமக்கள் மீது நடத்தப்படும் எந்த தாக்குதலும் பயங்கரவாதச் செயலாகத் தான் நான் பார்க்கிறேன்.




இஸ்ரேலின் இந்த பயங்கரவாதத்தை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் இஸ்ரேலின் நேச நாடுகளான அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் போக்கு இந்த நாடுகளின் மோசமான சார்பு நிலையை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறது. அமெரிக்கா, இஸ்ரேல் செய்து கொண்டிருக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் நியாயப்படுத்திக் கொண்டே இருக்கும் பட்சத்தில், அமெரிக்காவிற்கு எதிரான தீவிரவாத எண்ணங்களும் இஸ்லாமிய நாடுகளில் அதிகரித்து கொண்டே தான் இருக்கும்.

**உலகெங்கிலும் அனைத்து நாடுகளின் பிரச்சனைகளுக்கும் பேச்சுவார்த்தையை வலியுறுத்தும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இங்கு பேச்சுவார்த்தைக்கு அவசியம் இல்லை, தாக்குதல் தான் சரியான வழி என்ற இஸ்ரேலின் நிலையை ஆதரிக்கும் இரட்டை வேட நாடகம் நடத்திக் கொண்டு இருக்கின்றன.**

இந்தப் பிரச்சனை இரு வாரங்களுக்கு முன்பு தொடங்கியது. ஜுலை 12ம் தேதி இஸ்ரேல் துருப்புகளுக்கும், ஹிஸ்புல்லாஹ் அமைப்புக்கும் இடையே நடைபெற்ற சண்டையில், இரண்டு இஸ்ரேல் இராணுவ வீரர்களை ஹிஸ்புல்லாஹ் அமைப்பினர் சிறையெடுக்கின்றனர். இது ஒரு தேவையற்ற நடவடிக்கை. இஸ்ரேலை சீண்டிப்பார்க்கும் வேலை என்பது தான் எனது கருத்து. இஸ்ரேல் வீரர்களை விடுவிக்க வேண்டுமென்றால் பாலஸ்தீனிய கைதிகளை விடுவிக்க வேண்டும் என நிபந்தனை விடுக்கின்றனர். இந்தப் பிரச்சனைக் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் எனக் கூறுகின்றனர். இதனை நிராகரிக்கும் இஸ்ரேல் தங்களுடைய இரு இராணுவ வீரர்களை உடனே விடுவிக்க வேண்டுமெனக் கூறுகிறது. இராணுவ வீரர்கள் விடுவிக்கப்படும் வரையில் ஹிஸ்புல்லாஹ் நிலைகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் எனவும் கூறி லெபனான் முழுவதும் விமானத் தாக்குதலை நடத்தியிருக்கிறது.

நம்முடைய சமகால வரலாற்றில் மிக மூர்க்கமான ஒரு நாடு இஸ்ரேல் தான். இதனை இஸ்ரேல் அபிமானிகள் "இஸ்ரேலின் தைரியம்" எனக்கூறி கொண்டாடலாம். ஆனால் இந்த மூர்க்கத்தனத்தின் தற்போதைய கோர முகம் தான் லெபனானில் நிகழ்ந்து வருகிறது.

உலகெங்கிலும் அனைத்து நாடுகளின் பிரச்சனைகளுக்கும் பேச்சுவார்த்தையை வலியுறுத்தும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இங்கு பேச்சுவார்த்தைக்கு அவசியம் இல்லை, தாக்குதல் தான் சரியான வழி என்ற இஸ்ரேலின் நிலையை ஆதரிக்கும் இரட்டை வேட நாடகம் நடத்திக் கொண்டு இருக்கின்றன.

இரண்டு இஸ்ரேல் இராணுவ வீரர்களுக்காக தொடங்கிய இஸ்ரேலின் பதில் தாக்குதலில் சுமார் 350க்கும் மேற்பட்ட அப்பாவி லெபனான் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதலில் சுமார் 36 இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் (இஸ்ரேல் சமீபகாலங்களில் இல்லாத வகையில் மிக அதிகமான இழப்பை சந்தித்து உள்ளதாக இங்கிருக்கும் ஊடகங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன!!).

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களை விட பலம் குறைந்த நாடுகளிடமே தங்களுடைய "வீரத்தை" தொடர்ந்து நிலை நிறுத்தி வருகின்றன.

லெபனான் மீது தாக்குதலை தொடுத்திருக்கும் இஸ்ரேலுக்கு தன் மீது லெபனானால் பதில் தாக்குதல் தொடுக்க முடியாது என்பது தெரியும். காரணம் லெபனான் படையின் மொத்த பலமே 40,000 இராணுவ வீரர்கள் தான். லெபனானிடம் விமானப்படை இல்லை, கடற்படை இல்லை. விமான எதிர்ப்பு பீரங்கி கூட அதிகளவில் இல்லை. இந்த தைரியம் தான் இஸ்ரேலை அந்நாடு மீது குரூரமான தாக்குதல் தொடுக்க காரணமாக அமைந்து இருக்கிறது.

ஆனால் தங்கள் மீது பதிலடி கொடுக்கக் கூடிய வல்லமை பெற்ற நாடுகள் மீது அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் தங்களுடைய வீரத்தை பேச்சளவிலேயே வைத்துள்ளன. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் ஈரான், வடகொரியா போன்ற நாடுகளைச் சொல்லலாம். குறிப்பாக வடகொரியா மீது அமெரிக்காவுக்கு அச்சம் உண்டு. இன்று மரபுரீதியாக அல்லாமல் ஆயுத பலத்தை ஒட்டி தான் ஒரு நாட்டின் இராணுவ பலம் தீர்மானிக்கப் படுகிறது. இதில் பலமான நாடுகள் மீது தாக்குதல் தொடுக்கக் கூடிய வல்லமை நவீன ஆயுதபலம் மூலம் கிடைத்து விடுகிறது. வடகொரியாவை அமெரிக்காவால் தாக்க முடியும் என்றாலும் வடகொரியா அமெரிக்கா மீதும் பலமான பதிலடி கொடுக்க முடியும். அலாஸ்கா வரை சென்று தாக்கும் ஏவுகணைகள் வடகொரியாவிடம் உள்ளன. Missile Defence system போன்றவற்றை அமெரிக்க நிறுவ முனைந்து

*(தொடர்ச்சி – 8 ஆம் பக்கம் பார்க்க..)*

# கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் கலைஞர்களும் - ஷைத்தானின் திருவிளையாடல்களும்

*- முஹம்மது மஸாஹிம்*

***சென்ற இதழின் தொடர்...***

அல்லாஹ் விரும்பினால், அவனால் நியதிகளை மாற்ற முடியும். ஆனால், மனிதன் வரம்பு மீறி - அல்லாஹ்வின் அதிகாரங்களில் விளையாடுவதை அவன் விரும்பமாட்டான்.

வெறுமனே கிரா∴பிக்ஸ் மாயாஜாலங்களால் கற்பனை உருவங்களை காட்சிகளாக்கி விவரம் தெரியாத சின்னக் குழந்தைகளுக்கு வேண்டுமானால் விளையாட்டுக் காட்டலாம். ஆனாலும், உலகின் அத்தனை அறிவுஜீவிகளையும் ஒன்று திரட்டினாலும் - மனிதனைப் போன்ற ஒரு பகுத்தறிவுள்ள ஜீவனை மாத்திரமல்ல ஆகக்குறைந்தது, சுயமாக சிந்தித்து இயங்கக் கூடிய ஒரேயொரு "ஈ" யினை கூட படைத்திட முடியவே முடியாதென்பது திண்ணம். அதையும் கூட அல்லாஹ் தனது அல்குர்ஆனில் - அல்லாஹ்வையன்றி கடவுளாக வணங்குபவைகளின் கையாலாகாத தனத்தை விளக்குகையில் தெளிவுபடுத்திவிட்டான்.

மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது, எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது. இன்னும், அவர்களிடமிருந்து (ஒரு ஈ) ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால், அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது. தேடுவோனும், தேடப்படுவோனும் பலஹீனர்களே.

***(அல்குர்ஆன் - 22:73)***

இந்த கட்டுரையில், இன்னுமொரு விஷயத்தையும் குறிப்பிட வேண்டும். அதாவது, நம் இளைஞர்களில் சிலர் தங்களது அறியாமையால், ஏதோ - இஸ்லாத்தின் பக்கம் மக்களை கவரப் போவதாக நினைத்துக் கொண்டு - மனித சாயலில் கழுதை போன்றோ, குரங்கைப் போன்றோ கிரா∴பிக்ஸ் காட்சிகளை வடிவமைத்து, "இவர் அல்லாஹ் விரும்பாத - இந்த கெட்ட காரியத்தில் ஈடுபட்டதால், இவரை அல்லாஹ் இப்படி உருமாற்றிவிட்டான்" என்று இணையத் தளங்களில் பிரசுரித்து மக்கள் மத்தியில் ஒரு புரளியைக் கிளப்பிவிடுகின்றார்கள்.

இத்தகைய வதந்திகள் மூலம் - உண்மை எது? பொய் எது? என மக்கள் குழம்பி போய்விடுகின்றார்கள். சில வேளை, இது பொய்யான தகவலே என நிரூபிக்கப்படும்போது, அது பற்றி மாற்றுமத சகோதரர்கள் - இஸ்லாத்தை கேலியும், கிண்டலும் செய்ய இந்த கிரா∴பிக்ஸ் கிறுக்கனே காரணமாகிவிடுகின்றான்.

மனிதர்கள் வரம்புமீறும்போது - அவர்களுக்கு இவ்வுலகிலேயே தண்டனை கொடுத்து அதனை பின்தோன்றும் சமுதாயத்தினருக்கு படிப்பினையாக்கிட அவர்களை உருமாற்றுவது அல்லாஹ்வால் முடியாத காரியம் ஒன்றும் அல்ல. இவ்வாறு உருமாற்றப்பட்டவர்களின் வரலாறுகளை அல்குர்ஆனில் காணலாம்.

"அல்லாஹ்விடமிருந்து இதைவிடக் கெட்ட பிரதிபலனை அடைந்தவர்களைப் பற்றி உங்களுக்கு அறிவிக்கட்டுமா? (அவர்கள் யாரெனில்) எவரை அல்லாஹ் சபித்து, இன்னும் அவர்கள் மீது கோபமுங்கொண்டு, அவர்களில் சிலரைக் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் ஆக்கினானோ அவர்களும், ஷைத்தானை வழிப்பட்டவர்களும் தான் - அவர்கள்தாம் மிகவும் தாழ்ந்த நிலையினர் நேரான வழியிலிருந்தும் தவறியவர்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.

***அல்குர்ஆன் - 5:60***

ஆனாலும், அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி - நாம் செய்யும் கிரா∴பிக்ஸ்களை பிரபல்யப்படுத்துவது எந்த வகையில் நியாயம்..? இதற்காக, நாளை மறுமையில் அல்லாஹ்வின் கடுமையான கேள்விகணக்கின்போது, நாம் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

அதேபோல் - இன்னும் சிலரோ அல்லாஹ், முஹம்மது, லாயிலாஹா இல்லல்லாஹ் போன்ற வசனங்கள் இலையிலோ மரத்திலோ, மேகத்திலோ - இயற்கையாகவே தோற்றமளிப்பது போல மிக நேர்த்தியாக கிராபிக்ஸ் பண்ணி இணையத் தளங்களில் வெளியிட்டு, "பார்த்தீர்களா.?" இது கூட அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளின் வெளிப்பாடுதான், எனக் கூறி, மக்களை ஏமாளிகளாக்குவதோடு மட்டுமன்றி - அல்லாஹ்வின் மீதும் பொய்க்கற்பனை புனைகின்ற மாபெரும் பாவத்தை செய்கின்றார்கள். இவ்வாறு அல்லாஹ் செய்யாத ஒன்றை - செய்ததாக பொய் சொல்பவனைப் பற்றி அல்லாஹ் என்ன கூறுகிறான் என்பதைப் பாருங்கள்.

அல்லாஹ் மீது பொய்யைக் கற்பனை செய்கிறவனை விட, அல்லது அவனுடைய வசனங்களைப் பொய்யாக்குகிறவனை விட அநியாயக்காரன் யார்? நிச்சயமாக அநியாயக் காரர்கள் வெற்றி பெறவே மாட்டார்கள்.

***அல்குர்ஆன் - 6:21***

இவ்வாறான சில அடையாளங்கள் - உண்மைகளாக கூட இருக்கலாம். ஆனாலும், நன்கு தெரிந்து கொண்டே நமது கற்பனையை கிரா∴பிக்ஸ் ஆக்கி - அல்லாஹ் செய்ததாக சொல்லி மக்களை நம்பவைக்க வேண்டியதன் அவசியம் என்ன?

நீங்கள் அறிந்து கொண்டே உண்மையைப் பொய்யுடன் கலக்காதீர்கள். உண்மையை மறைக்கவும் செய்யாதீர்கள்.

***அல்குர்ஆன் : 2:42***

இஸ்லாத்தை பரப்புவதற்காக, கிரா∴பிக்ஸ் பண்ணுகிறோம் என்ற இதுபோன்ற காரியங்களால், நாம் பாவத்தை சம்பாதித்துக் கொள்வதற்கான எந்த அவசியமும் இல்லாமல் அல்லாஹ்வே மிகத் தெட்டத் தெளிவாக அவனது அத்தாட்சிகளை இப்பிரபஞ்சம் எங்கும் பரவச் செய்திருக்கிறான்.

அல்லாஹ் - எத்தனை அற்புதமான படைப்பாளன். அவனது ரம்மியமான படைப்பின் சௌந்தரியங்களை வாழ்நாள் முழுதும் ரசித்துக் கொண்டே இருக்கலாம்..

திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்.

***அல்குர்ஆன் - 95:4***

நிச்சயமாக நாமே (பூமிக்கு) சமீபமாக இருக்கும் வானத்தை, நட்சத்திரங்களின் அழகைக் கொண்டு அழகுபடுத்தியிருக்கிறோம்.

***அல்குர்ஆன் - 37:6***

வான (மண்டல)த்தில் கோளங்கள் சுழன்று வரும் பாதைகளை உண்டாக்கி, அவற்றிடையே ஒரு விளக்கை (சூரியனை)யும் ஒளிவான சந்திரனையும் உண்டாக்கினானே அவன் பாக்கியமுள்ளவன்.

***அல்குர்ஆன் - 25:61***

ஒரு திட்டமிட்ட அடிப்படையில், கட்டுக்கோப்பாக அனைத்தையும் மிக அழகாகவே படைத்திருக்கும் அந்த இறைவனின் அத்தாட்சிகளைப் பற்றி சிந்தனை செய்வோரால் தெளிவாகவே உணர முடியும் என்பதற்கு கீழ் வரும் இந்த வசனங்கள் நல்லதொரு எடுத்துக் காட்டு ஆகும்.

அவர்களுக்கு மேலிருக்கும் வானத்தை நாம் எவ்வாறு அதை (ஒரு கட்டுக் கோப்பாக) அமைத்து, அதை அழகு செய்து, அதில் எவ்வித வெடிப்புகளும் இல்லாமல் (ஆக்கியிருக்கின்றோம்) என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?

மேலும் நாம் பூமியை நீட்டி விரிவாக்கி, அதில் உறுதியான மலைகளை அமைத்துள்ளோம். மேலும் அதில் அழகிய புற்பூண்டுகளை (ஆண், பெண் வகையுள்ள) ஜோடியாக முளைப்பிக்கவும் செய்திருக்கின்றோம்.

(இது இறைவன் பக்கம்) திரும்பும் அடியார்கள் எல்லோருக்கும் (அகப்) பார்வை அளிப்பதாகவும், (நினைவூட்டும்) நல்லுபதேசமாகவும் உள்ளது.

***அல்குர்ஆன் - 50:6-8***



அவனது படைப்புக்களில் அழகையும், அதிசயங்களையும்தான் பார்த்திட முடியுமே தவிர, எந்தவொரு கோணலையும் குறைகளையும் நாம் பார்க்கவே முடியாது. அப்படியானால், "கை, கால் இல்லாத, கண் பார்வையற்ற, வாய்பேசமுடியாத, இதுபோன்ற உடல் ஊனமுற்றவர்கள் பலர் நம் மத்தியில் இருக்கிறார்களே.. அவர்களைப் பற்றி என்ன சொல்கின்றீர்கள்?" என என்னிடம் சிலர் கேட்கலாம்.

ஆம்.. அவர்கள் எல்லாம், எமக்கு உதாரணங்கள். அல்லாஹ்வினால், இப்படியும் மனிதர்களைப் படைக்க முடியும்.. அப்படிப் படைக்காமல், அழகிய முறையில் படைத்தமைக்காக மனிதன் நன்றி செலுத்துகின்றானா..? என பரீட்சிப்பதற்காகவும், இத்தகைய ஊனமுற்றவர்களுடன் - நாம் எந்தளவு அன்பாக நடந்துகொள்கின்றோம் என்பதை சோதிப்பதற்காகவும் இருக்கலாம்.

ஒரு சகோதரர் என்னிடம் கூறிய சம்பவத்தை - இந்த இடத்தில் நினைவுறுத்துவது பொருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

அவர் ஒரு மனிதரை சந்தித்து இருக்கிறார். அந்த மனிதரின் கை கால்கள் ஊனமுற்று, பார்க்கவே மிகவும் பரிதாபமாக தோன்றிய அந்த மனிதர் சொன்னாராம் - அல்லாஹ் எனக்குப் புரிந்த அருளுக்காக அவனுக்கு எத்தனை தரம் வேண்டுமானாலும் நன்றி செலுத்தலாம் என்றாராம். இதைக் கேட்ட சகோதரருக்கு ஆச்சரியம். உடனே உங்களிடம்தான் அப்படி எதுவும் அருள்புரியப்பட்டதாக தோணவில்லையே எனக் கேட்க உடனே அம்மனிதர் சொன்னாராம் - எனக்கு மலஜலம் கழிப்பதில் எந்தக் கஸ்டமும் இல்லை. இன்றைக்கு எத்தனையோ பேர், இந்த வியாதியால் அவதிப்படுகின்றார்களே.. இது என்மீது அல்லாஹ் புரிந்த அருள் இல்லையா..? எனக்கேட்டாராமே பார்க்கலாம். (அவர் கூறிய சம்பவத்தை - எழுத்து நடையாக்கும்போது, எதாவது கூடுதல், குறைவு இருந்தால் அல்லாஹ் என்னை மன்னிக்கட்டும்)

நாம் இந்த இடத்திலே - மிக ஆழமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது. அல்லாஹ் எமக்கு எல்லாவற்றையுமே ஒழுங்காக தந்திருந்தும் - அவன் நம்மீது புரிந்த அருட்கொடைகளுக்காக, நம்மில் எத்தனைபேர் அவனுக்கு நன்றியுடையவர்களாக நடந்து கொள்கின்றோம்..?

இன்னும் அல்லாஹ்வின் அரு(ட் கொடைக)ளை நீங்கள் கணக்கிட்டால், அவற்றை (வரையறை செய்து) நீங்கள் எண்ணிட முடியாது! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், மிகக் கருணையுடையோனாகவும் இருக்கின்றான்.

***அல்குர்ஆன் - 16:18***

பிறந்தது முதல் புத்தி சரியில்லாதவனுக்கு - வணக்க வழிபாடுகள் கடமையல்ல. கேள்வி கணக்கும் கிடையாது. அதேபோன்று எமக்கு முன்னுதாரணங்களாக்கப்பட்ட ஊனமுற்றவர்களுக்கும், அவர்கள் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளும் சிரமங்களுக்கு ஏற்ப மறுமைநாளில், அல்லாஹ்விடம் விஷேட கூலி இருக்கும் (அல்லாஹ் நன்கறிந்தவன்). ஏனெனில், அல்லாஹ் யாருக்கும் அநியாயம் செய்யாதவன்.

அதேநேரம், வெளித்தோற்றத்தில் தெரிகின்ற ஊனங்களை சுட்டிக்காட்டியோ அல்லது அலி என்பதற்காக கேலி பண்ணுவதையோ நாம் கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். காரணம், அடுத்தவர்களின் மனதைப் புண்படுத்துவதை இஸ்லாம் ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்பது மட்டுமன்றி, அல்லாஹ்வின் படைப்புக்களை குறை சொல்வது, அந்த படைப்பினை சிருஷ்டித்தவனை குறை சொல்வது போன்ற ஒரு செயலாகும்.

எது எப்படியோ, பொதுவான அடிப்படையில் - அல்லாஹ்வின் எந்தவொரு படைப்பும் மிக அற்புதமாகவும், ஆழ்ந்த திட்டமிடலுடனும் குறைகளின்றி படைக்கப்பட்டிருக்கின்றன என்பதே யதார்த்தமாகும்.

இறுதியாக, ஒரேயொரு விஷயத்தை மட்டும் சுட்டிக்காட்டி - இந்தக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என நினைக்கிறேன்.

அதாவது, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல - ஆயிரம்தான் கிரா∴பிக்ஸ் வின்னாதி வின்னர்களாக இருந்தாலும், அல்லாஹ்வின் படைப்புகளுக்கு நிகராக எவராலும் எதையுமே உருவாக்கிட முடியவே முடியாதென்பதற்கு, மனித படைப்பிலிருந்தே ஒரு எளிதான உதாரணத்தை சொல்லலாம் என நினைக்கிறேன்.

ஆம்.. இன்றைக்கு, உலகின் ஜனத்தொகை சராசரியாக 600 கோடி ஆகும். இந்த 600 கோடி மக்களினதும் கைவிரல் ரேகை ஆளுக்காள் வித்தியாசப்படும். ஒருவருடைய கைவிரல் ரேகை போன்று மற்றவருடைய கைவிரல் ரேகை இருக்காது என்பது நாமறிந்த உண்மையாகும்.

என்னைப் பொறுத்தவரை, இது ஒன்றே போதிய ஆதாரமாகும் - உண்மையிலேயே அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கும், அத்தகைய அல்லாஹ்வின் படைப்பாற்றல் எத்தனை பிரமாண்டமானது என நிரூபிப்பதற்கும்.

அல்லாஹ் நம் விரல்களில் வரைந்த இத்தகைய நுணுக்கமான கிரா∴பிக்ஸ்-ல் மிரண்டுபோன கம்ப்யூட்டர் விற்பன்னர்கள் - இன்று அதியுயர் பாதுகாப்பு பாஸ்வேர்ட் சிஸ்டமாக விரல்ரேகையை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள்.

அல்லாஹ்வை விட கிரா∴பிக்ஸ் கலைஞர்கள் உண்டா என்ன? உலகின் 600 கோடி மக்களுமே ஏதோ ஒரு வகையில் வித்தியாசமான முக சாயலைக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். சிலர் ஒரு யூகத்தின் அடிப்படையில் - “ஒரு மனிதரின் முக சாயலில் ஏழு பேர் உலகில் இருப்பார்கள்” என்று ஒரே தோற்றத்தைக் கொண்ட சில இரட்டையர்களைப் பார்க்கும்போது கூறுவார்கள். ஆனாலும், உண்மையில் நுணுக்கமாக அவதானித்தால் வித்தியாசங்களை காணலாம்.

சரி - ஒரு பேச்சுக்கு ஒரே சாயலில் 6 மனிதர்கள் (இலகுவாக கணக்கிட வசதி கருதி 6 என்று எடுக்கிறேன்) இருப்பார்கள் என்றே வைத்துக் கொள்வோமே. அப்பவும் இந்த 100 கோடி வித்தியாசமான முக சாயலை வடிவமைத்த கிரா∴பிக்ஸ் கலைஞன் யார்..? உலகில் உள்ள எவ்வளவு பெரிய கொம்பு வச்ச - கிரா∴பிக்ஸ் கலைஞனாக இருக்கட்டும். 100 கோடி வித்தியாசமான முக சாயலை வடிவமைத்துக் காட்டட்டுமே பார்க்கலாம்..

எனவே, ஆட்டின் தலையை மாட்டில் பொருத்துவது.. கழுதையை கரடியாக வடிவமைப்பது போன்ற செயல்களால், தாங்களும் ஏதோ படைப்பாளிகளைப் போல குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுகின்ற விளையாட்டையெல்லாம் - அல்லாஹ் யார்? அவனது வல்லமை என்ன? அவனது கட்டளைக்கு - நாம் எவ்வாறு அடிபணிய வேண்டுமென்பதையெல்லாம் அறியாதவர்கள் வேண்டுமானால் செய்துவிட்டுப் போகட்டும்.

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ் படிந்து, அண்ணல் பெருமானார்(ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற வழியில் - நடக்க வேண்டிய முஸ்லிம்களாகிய நாம், வீணான கிரா∴ பிக்ஸ் வடிவமைப்புகளில் ஈடுபட்டு எமது கால நேரங்களையும் வீணடிக்காது, சைத்தானின் நவீன சூழ்ச்சிகளிலிருந்து விடுபட அல்லாஹ் எங்களுக்கு உதவி புரிவானாக.

கடந்த காலங்களில் அறிந்தோ, அறியாமலோ செய்த தவறுகளுக்காக - அல்லாஹ் நம்மை மன்னித்து, பயன்தரும் கல்வியைக் கொண்டு நேரான வழியில் நடந்திட அருள்புரிந்து, ஈருல வாழ்க்கையையும் சிறப்பாக்கி வைப்பானாக.

☆ ☆ ☆

# மனிதகுல எதிரிகள்

***- மஹ்மூத் அல் ஹஸன்***

இந்தியாவை மீண்டும் ஒரு முறை அதிர்வுக்குள்ளாக்கியுள்ளது, கடந்த 11 ஆம் தேதி நடந்த மும்பை தொடர் குண்டு வெடிப்பு. அப்பாவிகளை அநியாயமாகக் கொன்றுவிட்டனர் இரக்கமற்ற கொலையாளிகள்.

வருங்காலத்தைப் பற்றிய வண்ணக் கனவுகளுடன் வலம் வந்த, இளம் வயதினர், குடும்பச் சுமைதாங்கிகளாய் வேலை∴ தொழில் செய்த நடுத்தர வயதினர், முதிர்ந்து தளர்ந்து நோயுற்ற பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பிலுள்ள பிள்ளைகள், பூப்பெய்தி நிற்கும் பெண்மக்களைத் திருமணம் செய்விக்க வேண்டிய தந்தையர், சின்னஞ்சிறு மக்களைப் பள்ளிக்கனுப்பி, அவர்களின் வளர்ச்சியில் தம் எதிர்காலத்தைக் கனவு கண்ட பெற்றோர், ஒருவேளை கூட வயிறார உண்ண வழியற்ற பரம ஏழை, பிஞ்சுக் குழந்தைகளை வீட்டில் விட்டு விட்டுக் குடும்பத் தேவைக்காய்ப் பணிபுரியச் சென்ற பெண்கள் எனப் பலரையும் காரணமின்றிப் பலி கொண்ட பயங்கரவாதம் இது.

“இதைச் செய்தவர்கள்” எனப் புலனாய்வு மற்றும் உளவுத் துறையினர், “முஸ்லிம் பெயரில்” இயங்கிவரும் சில இயக்கங்களின் பெயர்களைக் கூறியுள்ளனர்.

முஸ்லிம் என்பவன் வெறும் அரபி மொழிப் பெயர் தாங்கியவன் அல்லன். அவன் தன்னைப் படைத்த இறைவனின் கட்டளைகளுக்குச் செவிசாய்த்துக் கட்டுப்பட்டு நடப்பவன் ஆவான்.

முஸ்லிம் என்ற அரபி மொழிச் சொல்லின் பொருள் சரணடைந்தவன்∴ கட்டுப் பட்டவன் என்பதே. இறைவனின் கட்டளை அவன் அருளிய மறையில் உள்ளது. அதற்குக் கட்டுப்படாதவன் இறைவனை மறுத்தவன் - அவன் அரபி மொழிப் பெயர் தாங்கியாக இருந்தாலும்கூட.

இந்த மறைநூல் இறையச்சமுடையவர்களுக்கு நேர் வழி காட்டும்- எனக் குர் ஆன் (2:2) கூறுகிறது.

குர் ஆன் கூறும் கட்டளைகளை ஏற்காதவன் இறையச்சமுடையவன் அல்லன். பின் அவன் எப்படித் தன்னை முஸ்லிம் எனக் கூறிக்கொள்ள முடியும்?

***( தொடர்ச்சி 11 ஆம் பக்கம் பார்க்க)***

# உங்களுக்குத் தெரியுமா?

(விடைகள் 9-ம் பக்கம்)

1. சிறந்த மருத்துவ முறைகளை உலகிற்கு அளித்தவர் யார்?
2. கத்தர் நாட்டிலிருந்து ஒளிபரப்பாகும் பிரபல தொலைக்காட்சி சேனலின் பெயர் என்ன?
3. எந்த நாட்டைச் சார்ந்த மருத்துவ அறிஞர் ஹோமியோபதியைக் கண்டறிந்தார்?
4. உலகின் நீண்ட காஸ்பியன் ஏரி எந்த இரு நாடுகளுக்கிடையே இருக்கின்றது?
5. மலேசியா நாட்டின் கரன்சியின் பெயர் என்ன?
6. பிலால்(ரலி) அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர் யார்?
7. அலி(ரலி) அவர்களை கலீ∴பாவாக ஏற்று முதலில் பைஅத் செய்த நபித்தோழர்கள் யார்?
8. திருக்குர்ஆனை முதலில் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
9. இஸ்லாத்தை ஏற்று “புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி” என்ற நூலை எழுதியவர் யார்?
10. மௌலானா மௌதூதி அவர்களை பிரிட்டிஷ் அரசு ஏன் சிறையில் அடைத்தது?

*(4 ஆம் பக்கத் தொடர்ச்சி – இஸ்ரேலின்...)*
கொண்டிருந்தாலும், வடகொரியாவின் இந்த பலம் தான் இந் நாடு மீதான அமெரிக்காவின் தாக்குதலை பேச்சளவிலேயே வைத்திருக்கிறது.

ஆனால் இராக், லெபனான் போன்ற பலமில்லாத நாடுகளை எளிதில் தாக்கி தங்கள் “வீரத்தை” நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பிரச்சனைக்கு முக்கிய காரணம் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தான்

லெபனானின் தென்பகுதிகள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருந்த பொழுது, தெற்கு லெபனானை விடுவிக்க 1980களில் உருவாகிய படை தான் ஹிஸ்புல்லாஹ். 2000ம் ஆண்டு இஸ்ரேல் படைகள் லெபனானில் இருந்து வெளியேற ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல் மிக முக்கியமான காரணம். இஸ்ரேல் படைகள் வெளியேறியப் பின்னால் லெபனானில் இரு படைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. ஒன்று லெபனானின் அரசு இராணுவம். மற்றொன்று ஹிஸ்புல்லாஹ் அமைப்பு.



ஹிஸ்புல்லாஹ்வை தீவிரவாதக் குழு என அமெரிக்காவும், இஸ்ரேலும் கூறினாலும், இந்த அமைப்பிற்கு லெபனான் மக்களிடையே பலமான ஆதரவு உண்டு. இஸ்ரேல் படைகள் லெபனானில் இருந்து வெளியேற ஹிஸ்புல்லாஹ் தான் முக்கிய காரணம். இதனால் லெபனான் மக்களுக்கு ஹிஸ்புல்லாஹ் மீது அபிமானம் உண்டு. ஹிஸ்புல்லாஹ் அமைப்பிற்கு அரசியல் பிரிவு, இராணுவப் பிரிவு என்ற இரு பிரிவுகள் உண்டு. லெபனான் பாரளுமன்றத்தில் இதன் அரசியல் பிரிவிற்கு உறுப்பினர்கள் உள்ளனர். ஆளும் கட்சியிலும் இது அங்கம் வகிக்கிறது. இதன் அரசியல் பிரிவு லெபனான் மக்களுக்கு பிற நிறுவனங்களுடன் இணைந்து நிறைய உதவிகளை செய்து வருகிறது. 2000ம் ஆண்டுக்குப் பின் லெபனானில் போருக்குப் பிந்தைய பல ஆக்கப்பூர்வமான பணிகளில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பிற்கு முக்கியப் பங்கு உண்டு

ஹிஸ்புல்லாஹ் தனது இராணுவப் பிரிவையும் தொடர்ந்து பராமரித்து வருகிறது. ஹிஸ்புல்லாஹ்விற்கு உதவிகள் சிரியா, ஈரான் போன்ற நாடுகள் மூலம் கிடைக்கிறது என நம்பப்படுகிறது. இந்த இராணுவப்பிரிவு கலைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் இருந்தாலும் அதனை ஹிஸ்புல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை. லெபனானுக்கு என்று ஒரு இராணுவம் இருந்தாலும், தெற்கு லெபனானை தங்களால் மட்டுமே பாதுகாக்க முடியும் என ஹிஸ்புல்லாஹ் கூறுகிறது. ஹிஸ்புல்லாஹ்வின் இராணுவப் பிரிவு கலைக்கப்பட்டு லெபனான் இராணுவம், லெபனானின் தென்பகுதிகளை தங்கள் கட்டுப்பட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பது இஸ்ரேலின் வாதம். ஆனால் இதனை ஹிஸ்புல்லாஹ் தொடர்ந்து நிராகரித்து வந்துள்ளது. அது தவிர ஹிஸ்புல்லாஹ்வின் இராணுவப் பிரிவை தங்கள் கட்டுப்பட்டில் கொண்டு வரக்கூடிய பலம் கூட லெபனானிடம் இல்லை என்பது தான் உண்மை.

இப்படி ஒரு சிக்கலான பிண்ணனியில் தான் தன்னுடைய இரண்டு இராணுவ வீரர்களை விடுவிக்கும் வரை தாக்குதல் தொடரும் என இஸ்ரேல் கூறி வருகிறது. ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேலின் இராணுவ வீரர்களை விடுவிக்கப் போவதில்லை என்று கூறி வருகிறது. ஹிஸ்புல்லாஹ்வின் பலத்தை குறைக்க தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என்று இஸ்ரேல் கூறுகிறது. ஹிஸ்புல்லாஹ்வின் பலம் குறையவில்லை என அதன் தலைவர் கூறி வருகிறார்.

இவ்வாறு பிரச்சனையின் சூழல் இருக்கும் நிலையில் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி லெபனான் மக்கள் தான். ஹிஸ்புல்லாஹ்வின் நிலைகள் என்று கூறிக் கொண்டு பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இது ஒரு பயங்கரவாதச் செயலாகவே நான் கருதுகிறேன்

உலகெங்கிலும் மனித உரிமைகளை வலியுறுத்தி வரும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இந்த தாக்குதலை நியாயப்படுத்துவதும், போர் நிறுத்தத்தை வலியுறுத்தாமல் இருப்பதும் இந் நாடுகளின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்துகின்றன.

ஹிஸ்புல்லாஹ்வின் முதல் நடவடிக்கை நியாயமற்றது என்பதைக் காரணம் காட்டி லெபனான் மீது இஸ்ரேல் தொடுத்து வரும் பயங்கரவாதத்தை நியாயப்படுத்த முடியாது.

***நன்றி : தமிழ் சசி***

# பலதார மணம்

***- இறைநேசன்***

சென்ற இதழின் தொடர்ச்சி..

**இந்து மதத்தில் பலதார மணம்**

இந்துக்களில் சிலர், இந்து வேதங்கள் பலதார மணத்தை அனுமதிக்கவில்லை “ஒருவனுக்கு ஒருத்தி” என்கிற சித்தாந்தத்தைத்தான் கூறுகின்றது எனத் தவறாக விளங்கி, மற்றவர்களுக்கும் அதையே சொல்கின்றனர். பலதார மணத்தைப்பற்றி இந்து வேதங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்ப்போம்.

ஒரு பிராமணர் நான்கு மனைவியரை மணக்கலாம் (விஷ்ணுஸ்மிருதி 24:1)

கிருஷ்ணருக்குப் பதினாராயிரம் மனைவிகள் இருந்ததாக இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் கூறப்படுகின்றது.

அதுபோக ஒரு பெண்ணிற்குப் பல கணவர்கள் (பஞ்ச பாண்டவர்களுக்கு திரௌபதி என்கிற ஒரு மனைவி) இருந்ததாகவும் மகாபாரதத்தில் கூறப்படுகின்றது .

ராமரின் தகப்பனார் தசரதன் ஒன்றுக்கு மேற்பட்ட (கிட்டத்தட்ட அறுபதாயிரம்) மனைவிகளைக் கொண்டிருந்தார். முருகனுக்கும் வள்ளி, தெய்வானை என இரண்டு மனைவிகள் இருந்தனர்.

**பலதார மணம் செய்து கொள்வதில் முன்னணியில் உள்ளவர் யார்?**

இஸ்லாத்தில் பெண்களின் நிலை பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழு (COMMITTEE OF THE STATUS OF WOMAN IN ISLAM) 1975ஆம் ஆண்டு வெளியிட்ட

அறிக்கையின் 66 மற்றும் 67ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள புள்ளி விபரக் கணக்கின்படி “1951ஆம் ஆண்டுக்கும் 1961 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட 10 ஆண்டுகளில் இந்துக்களில் 5.06 சதவீத ஆண்கள் ஒன்றுக்கும் மேற்பட்டப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டிருந்தனர். ஆனால் 4.31 சதவீத இஸ்லாமிய ஆண்கள் மாத்திரமே ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொண்டிருந்தனர்” என்று கூறுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி இஸ்லாமிய ஆண்கள் மாத்திரம்தான் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்ள முடியும். இந்துக்கள் ஒன்றுக்கும் மேற்பட்டப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வது இந்திய அரசியலமைப்புச் சட்டபடி சட்ட விரோதமாகும். இவ்வாறு இந்துக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்வது சட்ட விரோதமாக இருந்தாலும் - இஸ்லாமியர்களோடு ஒப்பிடும்போது இந்துக்களே ஒன்றுக்கு மேற்பட்டப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வதில் முன்னணி வகிக்கின்றனர்.

1953 ஆம் ஆண்டுவரை இந்துக்களும் ஒன்றுக்கு மேற்பட்டப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளச் சட்டபூர்வமான தடையேதும் இல்லாமல்தான் இருந்தது. 1954 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துத் திருமணச் சட்டத்தில்தான் இந்து மதத்தில் ஆண்கள் ஒன்றுக்கும் மேற்பட்டப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப் பட்டது. இன்றைக்கும் கூட, “ஒன்றுக்கு மேற்பட்டப் பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது” என்று இந்து ஆண்களைத் தடுப்பது இந்திய அரசியலமைப்புச் சட்டமே தவிர இந்து வேதங்களன்று.

**பலதார மணத்தைப் பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது ?**

உலகில் உள்ள வேதப் புத்தகங்களில் “ஒருவரை மாத்திரம் திருமணம் செய்து கொள்ளுங்கள்” என்று அறிவுறுத்துவது திருக்குர்ஆன் மட்டும்தான்.

திருக்குர்ஆனின் மனைவியர் (அந்நிஸா) என்னும் நான்காவது அத்தியாயத்தின் 3 ஆவது வசனம் “உங்களுக்கு விருப்பமான பெண்களை - இரண்டோ, மூன்றோ, நான்கோ - மணந்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் (இவர்களிடையே) சமநீதி செலுத்த முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்)” என்று சுட்டிக் காட்டுகின்றது.

மேலும் அதே அத்தியாயத்தின் 129 ஆம் வசனத்தில், “(இறை நம்பிக்கையாளர்களே! உங்களுக்குப் பல மனைவியர் இருந்து, உங்கள்) மனைவியரிடையே (முற்றிலும்) சமநீதி செலுத்த வேண்டுமென நீங்கள் (எவ்வளவு) விரும்பினாலும் உங்களால் முடியாது” என்று மனித இயல்பைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. மேற்படி வசனங்களிலிருந்து இஸ்லாத்தில் பலதார மணம் என்பது ஒரு அனுமதியேயன்றி கட்டாயமில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட குர்ஆன் வசனம் 4:3 ல் “சமநீதி செலுத்த முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்)” என்று கூறுவதன் மூலம் ஒரேயொரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகின்றது. மேலும் 4:129 ஆவது வசனத்தில் “சமநீதி செலுத்த வேண்டுமென நீங்கள் (எவ்வளவு) விரும்பினாலும் உங்களால் முடியாது” என்று கூறுவதன் மூலம் ஒரு பெண்ணையே மணந்து கொள்வதை அதிகமதிகம் வலியுறுத்துகின்றது என்பதையும் புரிந்துகொள்ளலாம்.

திருக்குர்ஆன் அருளப்படுவதற்கு முந்தைய கால கட்டங்களில் பலதார மணத்திற்குத் தடையில்லாமல் இருந்தது . ஆண்கள் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம் இத்தனைதான் என்ற வரையறை என்பது இல்லாமலிருந்தது. ஆண்களில் பெரும்பாலோர் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்களாக இருந்தனர். ஆனால் திருக்குர்ஆன் இறக்கியருளப்பட்ட பிறகு இஸ்லாத்தில் ஓர் ஆண் அதிக பட்சமாக நான்கு பெண்களை மட்டுமே திருமணம் செய்து கொள்ள முடியும் என்று வரம்பு கட்டியது. அதுவும் மனைவியரிடையே சமமான நீதி செலுத்த வேண்டும் என்ற கடுமையான நிபந்தனையோடுதான் பலதார மணத்திற்கு வரையறையுடன் கூடிய அனுமதி அளித்தது - அனுமதிதான் கட்டாயமன்று.

ஏற்கெனவே திருமணம் ஆன ஒருவரைக் கணவராக ஏற்றுக் கொள்வது அல்லது “பொதுச் சொத்தாக மாறுவது” என்ற இரண்டைத் தவிர மூன்றாவது வாய்ப்பே இல்லாத நிலையில் உள்ள பெண்ணுக்கு - இஸ்லாமிய மார்க்கம் (இரண்டாம் தாரமான) முதலாவது நிலையை ஏற்றுக் கொள்ளச் சொல்லி - (பொதுச் சொத்தாக மாறுவதான) இரண்டாவது நிலையை முற்றிலும் மறுக்கச் சொல்கிறது.

இஸ்லாம் கூறும் ஒழுக்கமான உறவு நெறிகளைப் பின்பற்றினால் வெளிப் பெண்களுடன் தொடர்பு வைப்பவர்களின் எண்ணிக்கை குறையும் என்பதுதான் யதார்த்த நிலை.

ஏனெனில் திருமணம் எனும் போது பொறுப்புகளைச் சுமக்க வேண்டியிருப்பதால் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான ஆண்கள் மட்டுமே சட்டப்படிச் செல்லுபடியாகின்ற பலதார மணத்தை நாடுவர். விபச்சாரத்திற்கோ, சின்ன வீடு வைத்துக் கொள்வதற்கோ எவ்விதப் பொறுப்பையும் சுமக்க வேண்டியதில்லை என்பதால் ஆண்கள் சீரழியும் நிலைமைதான் உருவாகும்.

ஒரு சட்டத்தை இயற்றினால் அது முக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் இருக்கவேண்டும். 1400 வருடங்களுக்கு முன்பு திருக்குர்ஆன் அருளப்பட்டு, பழமை வாய்ந்ததாக இருந்த போதிலும் அது இந்த காலத்தின் நடைமுறைகளுக்கு எந்த பாதகத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. “இஸ்லாமியச் சட்டங்களை

***(தொடர்ச்சி – 11 ஆம் பக்கம் பார்க்க..)***

---

**உங்களுக்குத் தெரியுமா?**

## விடைகள்

1. இப்னு ஸீனா
2. அல்-ஜஸீரா
3. ஜெர்மனி
4. ஈரான், ரஷ்யா
5. ரிங்கிட்
6. அபூபக்கர்(ரலி)
7. தல்ஹா(ரலி), ஜுபைர்(ரலி)
8. அப்துல் ஹமீது பாக்கவி
9. கொடிக்கால் செல்லப்பா (ஷேக் அப்துல்லாஹ்)
10. காதியாணிகளுக்கு மறுப்பாக “இறுதி நபித்துவம்” என்ற நூலை எழுதியதற்காக

# பொருளீட்டுவதற்கு இஸ்லாம் கூறும் வரைமுறைகள்

**(ஹிஜ்ரி 1426 -ரமலான் மாதத்தில் துறைமுகம்-ஜித்தா நடத்திய போட்டியில் வெற்றிபெற்ற கட்டுரை)**
**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

### 4. மனப்பூர்வமாக ஒருவர் தருவதை ஏற்றுக்கொள்ளுதல்

பெண்களுக்கு அவர்களின் மணக்கொடைகளை கட்டாயமாக கொடுத்துவிடுங்கள்! அவர்கள் மனமுவந்து அதில் எதையேனும் விட்டுக்கொடுத்தால் மனநிறைவுடனும் மகிழ்வுடனும் அதை உண்ணுங்கள். அல்குர்ஆன் 4:4

மனைவி விட்டுத்தரக்கூடிய மணக்கொடையைப் போல் பரிசாக வழங்குவது, உறவினர்கள் விட்டுக்கொடுப்பது போன்றவற்றையும் பொருளீட்டலில் இஸ்லாத்தில் ஆகுமானதாகும்.

### 5. கடன் மூலம் பொருளீட்டுதல்

அழகிய கடனை அல்லாஹ்வுக்காக கடன் கொடுப்பவர் யார்? அதை அவன் அவருக்கு அனேக மடங்கு அதிகரிக்கும் படிச் செய்வான். அல்குர்ஆன் 2:245

நபி அவர்கள் கூறினார்கள்.

உங்கள் அண்டை அயலார்கள் நோயிலிருந்தால் அவரிடம் சென்று விசாரியுங்கள். அவர்கள் நெருக்கடியில் இருந்தால் கடன் கொடுத்து உதவுங்கள்.

எனவே மேற்காணும் திருக்குர்ஆன் வசனமும், நபிமொழியும் எவர் ஒருவருர் வறுமை, பற்றாக்குறை, நோயினால் சிரமப்படுகிறாரோ அவருக்கு கடனை வழங்க வேண்டும் என அறிவுறுத்துகின்றனர். எனவே தன்னிடம் வசதியில்லாத ஒருவர் வசதியுடையவரிடம் கடனாக பொருளை பெற்றுக்கொள்வதும் கூடுமானதாகும்.

பொருளீட்டும் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

பொருளீட்டும் நடவடிக்கைகளில் சில நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என இஸ்லாம் மக்களுக்கு அறிவுறுத்துகின்றது.

### 1. லஞ்சம் வாங்குவதற்கு தடை

உங்களுக்கிடையே உங்கள் பொருட்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்! தெரிந்து கொண்டே மக்களின் பொருட்களில் ஒரு பகுதியைப் பாவமான முறையில் சாப்பிடுவதற்காக அதிகாரிகளிடம் உங்கள் பொருட்களைக் கொண்டு செல்லாதீர்கள! திருக்குர்ஆன் 2:188

இவ்வசனம் மூலம் பிறரின் பொருட்களை அடைய லஞ்சம் கொடுப்பதோ, வாங்குவதோ தவறு என சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே பொருளீட்டலில் இலஞ்சத்தைத் தவிர்க்கவேண்டும்.

### 2. வட்டி வாங்கத் தடை

வட்டியை உண்போர் (மறுமை நாளில்) ஷைத்தான் தீண்டியவனைப் போல் பைத்தியமாக எழுவார்கள். “வியாபாரம் வட்டியைப் போன்றதே” என்ற அவர்கள் கூறியதே இதற்குக் காரணம். அல்லாஹ் வியாபாரத்தை அனுமதித்து வட்டியை தடைசெய்து விட்டான். அல்குர்ஆன் 2:275

வட்டி மூலம் பொருள் சேர்ப்போர்க்கு நிரந்தர நரகம் என்றும் அவர்கள் என்னுடன் போர் செய்பவர்கள் என்றும் அல்லாஹ் நம்மை எச்சரிக்கை செய்கின்றான். எனவே கொடிய வட்டியைக் கொண்டு நாம் பொருளீட்டுவதை தவிர்க்க வேண்டும்.

### 3. பிறர் பொருளை அபகரித்தல்

நம்பிக்கை கொண்டோரே! மத குருமார்களிலும், பாதிரிகளிலும் அதிகமானோர் மக்களின் செல்வங்களை தவறான முறையில் உண்ணுகின்றனர். அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களை தடுக்கின்றனர். அல்-குர்ஆன் 9:34

தங்களை நாடிவரக் கூடிய மக்களிடம் தவறான முறையில் அவர்களிமிருந்து பொருளை அபகரிப்பது திருடுவதற்கு சமமாகும். இவ்வாறு மதத் தலைவர்களும், பாதிரியார்களும் உண்ணுவதை அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

### 4. மோசடி

நம்பிக்கை கொண்டோரே! அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் மோசடி செய்யாதீர்கள்! உங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றிலும் மோசடி செய்யாதீர்கள். (திருக்குர்ஆன் 8:27)

ஒருவர் நம்பி உங்களிடம் ஒப்படைத்த பொருளை அவர் கேட்கும் போது அவரிடம் திருப்பித் தர வேண்டும். அதனை திருப்பித் தரமால் ஏமாற்றுவதை அல்லாஹ் இவ்வாறு திருமறையில் குறிப்பிடுகின்றான்.

### 5. அனாதைச் சொத்து

அனாதை சொத்துக்களை அவர்களிடம் அளித்துவிடுங்கள்! நல்லதை கெட்டதற்கு பகரமாய் மாற்றிவிடாதீர்கள்! அவர்கள் சொத்துக்களை உங்கள் சொத்துக்களுடன் சேர்த்து சாப்பிடாதீர்கள்! இது மிகப்பெரிய குற்றமாக உள்ளது. திருக்குர்ஆன் 4:2

உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அனாதைகளையும், அவர்களின் சொத்துக்களையும் அவர்கள் உரியவயதை அடைந்தவுடன் அவரின் சொத்தை அவரிடம் வழங்கிவிட வேண்டும். அதில் எதையும் அடைந்து கொள்ள முயற்சிக்கக் கூடாது.

### 6. பொய் சொல்லி வியாபாரம்

வேதமுடையோரே! ஏன் உண்மையை பொய்யுடன் கலக்கிறீர்கள்! அறிந்து கொண்டே ஏன் உண்மையை மறைக்கிறீர்கள். (திருக்குர்ஆன் 3:71)

வியாபாரத்தில் ஒரு பொருளை அது உரிய தரத்துடன் இல்லையெனினும் அதைப்பற்றி உயர்வாகக் கூறி அதனை விற்பனை செய்வது கூடாது.

இவ்வாறு பொருளீட்டுவது இஸ்லாத்தில் மறுக்கப்படுவதோடு இது மிகப் பெரிய குற்றம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

### 7. அளவை, நிறுவை மோசடி

அளவையும், நிறுவையையும் நிறைவாக்குங்கள்! மக்களுக்கு அவர்களின் பொருட்களை குறைத்துவிடாதீர்கள்! (அல்குர்ஆன் 7:85)

ஒரு பொருளை வாங்கும் நுகர்வோருக்கு அதனுடைய சரியான அளவையும், எடை போடும் போது சரியாக நிறுத்தியும் தர வேண்டும். அவ்வாறில்லாமல் ஏமாற்றி பெறக்கூடிய பொருள் முறையாக சம்பாதித்ததாக ஆகாது,

### 8. விபச்சாரம்

கற்பொழுக்கம் நாடும் உங்கள் பெண்களை இவ்வுலக சாதனங்களைப் பெறுவதற்காக விபச்சாரத்திற்கு நிர்பந்திக்காதீர்கள்! திருக்குர்ஆன் 24:33

பொருளீட்ட வேண்டும் என்பதற்காக தங்களது குடும்பத்தைச் சார்ந்த பெண்களை விபச்சாரத்தின் பக்கம் அழைத்துச் செல்லக் கூடாது. அல்லாஹ் இந்தச் செயலை மன்னிக்கவேமாட்டான்.

மேற்கூறிய இவை மட்டுமல்லாமல்

(1) கலப்படம் செய்து பொருட்களை விற்பதையும் (அல்குர்ஆன் 2:42)

(2) மார்க்கத்தைக் காட்டி பொருள் திரட்டுவதையும் (அல்குர்ஆன் 10:72)

(3) சகோதரர்களுக்கு தரவேண்டிய சொத்தை தராமல் ஏமாற்றி அதன் மூலம் பொருளீட்டுவதையும் (அல்குர்ஆன் 38:23, 24)

(4) பொய்ச் சத்தியம், யாசகம் கேட்டு பொருள் பெறுவதையும் (அல்குர்ஆன் 16:95) மற்றும்

(5) ஈட்டிய பொருளை கஞ்சத்தனமாக வைத்திருப்பதையும் அல்லாஹ் தன்னுடைய திருக்குர்ஆனின் மூலம் நமக்கு தடை செய்துள்ளான்.

எனவே அல்லாஹ் நமக்கு வழங்கிய அருட்கொடையான பொருள்களை நியாயமான முறையில் மேற்கூறப்படும் அல்லாஹ்வின் வரையரைகளையும், நெறிமுறைகளையும் பேணி நபி(ஸல்) அவர்கள் காட்டிய நேரிய வழியில் சம்பாதிப்பதோடு அதே அல்லாஹ்வின் கட்டளைப்படி நடப்போமாக!

---

( 9 ஆம் பக்கத் தொடர்ச்சி ..)

ஏற்கக்கூடாது, ஏனெனில் அவை பழங்காலத்தவை" என்று கூறக்கூடியவர்கள், கூடா உறவுகளைத் தடுக்கக் கூடிய ஒரு மாற்று வழியை எடுத்து காட்ட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்று தான் கூற வேண்டும்.

இஸ்லாத்தில் ஆண்கள் பலதார மணம் செய்து கொள்ள இஸ்லாம் அனுமதிப்பதற்கு இன்னும் வேறு பல காரணங்கள் இருந்தாலும் - தங்களின் மானத்தை மட்டுமல்லாது - முக்கியமாகப் பெண்களின் மானத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கவே ஆண்கள் பலதார மணம் செய்து கொள்வது சில நிபந்தனைகளுடன் இஸ்லாத்தில் அனுமதிக்கப் பட்டுள்ளது.

இஸ்லாம் ஆண்கள் பலதார மணம் செய்வதை வரவேற்க்கத்தக்க ஒன்றாகவோ அல்லது கட்டாயம் ஒவ்வொரு ஆணும் பலதார மணம் செய்தாக வேண்டும் என்றோ கட்டளையிடவில்லை. மாறாக ஒரு ஆண் தான் விபச்சாரத்திற்கு சென்றுவிடுவோம் என்று அஞ்சினால் அவ்வாறு அந்த மானகேடான காரியத்தை செய்யாமல் இன்னொரு திருமணம் செய்துக்கொள்ள அனுமதிக்கிறது அவ்வளவு தான்.

பொதுவாக எந்த ஒரு இஸ்லாமிய சட்டமாக இருந்தாலும், ஒரு மு∴மினினுடைய மனநிலை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை திருமறைக் குர்ஆன் மிகவும் தெளிவாக (அஹ்ஸாப் என்னும்) 33வது அத்தியாயம் 36வது வசனம் "அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசம் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்மான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள்"

நமது அறிவுக்கு சரியென்று தோன்றினாலும் அல்லது தவறென்று தோன்றினாலும் அல்லாஹ் ஒரு கட்டளையிட்டு விட்டால் அதனை நமது அறிவோடு ஒப்பிட்டு பார்க்காமல் அதனை அப்படியே பின்பற்ற வேண்டியது தான் நம்முடைய கடமையென்பதை மேற்கண்ட வசனத்தின் மூலம் புரிந்து கொள்ளமுடிகின்றது.

வல்ல இறைவன் நம் அனைவரையும் இஸ்லாத்தை அதன் தூயவடிவில் புரிந்து அதன்படி நடக்க வழிவகை செய்வானாக!

( 7 ஆம் பக்கத் தொடர்ச்சி (மனிதகுல எதிரி..)

ஓரிறை நம்பிக்கையாளர்களே! நன்மையிலும், இறையச்சமுடைய செயல்களிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம். அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள் - நிச்சயமாக அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன். (குர்ஆன், 5:2) என்று இறைவன் கட்டளை இட்டுள்ளான். இதற்கு மாறாகப் பாவத்திலும் பகைமையிலும் உதவிக் கொண்டு குண்டு வைப்பவன் முஸ்லிம் அல்லன் அவன் மனிதகுல எதிரியே..

கொலைக்குப் பழியாக அல்லது பூமியில் குழப்பத்தைத் தடுப்பதற்காக(எனத் தக்க காரனமின்றி) எவன் ஓர் உயிரைக் கொல்கிறானோ அவன் மனித குலம் முழுவதையும் கொன்றவன் போன்றவனாவான். எவன் ஓர் உயிரை வாழ வைக்கிறானோ அவன் மனித குலம் முழுவதையும் வாழ்வித்தவன் போன்றவனாவான் எனக் குர் ஆன்(5:32) வழி காட்டுகிறது.

முஸ்லிம் எனத் தம்மை அழைத்துக் கொள்ளத் தகுதி படைத்தோர் இறை மறையின் வழிகாட்டல் படி வாழ்வோர் மட்டுமே. மற்றவர் வெறும் பெயர் தாங்கிகளே. அவர்களால் சமுதாயத்துக்கு எப்பலனுமில்ல: மாறாகப் பழியே வரும்.

குறிப்பு:- குர் ஆனில், நாட்டை ஆள்வோர்க்காய்க் கட்டளையிடப்பட்டுள்ள போர் பற்றிய வசனங்களை எடுத்துக்காட்டி மேற்கண்ட பயங்கரவாததைக் குர் ஆன் ஆதரிக்கிறது எனக் கடிதம் எழுத நினைப்போர் இக்கட்டுரையை மறந்திடுக!

**myyh` itAk> kWik ehisAk ekgfif nfhzltH>**

**jk tUejdiu fzzaggLjjlLk! myyh` itAk kWik ehisAk ekgfif nfhzltH> jk cwtdiur NrHjJf nfhsslLk! myyh` itAk kWik ehisAk ekgfif nfhzltH> (Ngrdhy) edikiag NgrlLk! myyJ tha %b ,UfflLk!**

*Mjhuk : Gfhh>*

*K]yk :mg+`{iuuh(uy))*

# குறுக்கெழுத்துப் போட்டி - 2:10

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 | ■ |
| ■ | ■ | | | | | 3 | ■ |
| 4 | ■ | ■ | 5 | ■ | ■ | | |
| 6 | | | | ■ | ■ | | |
| ■ | ■ | 7 | | ■ | ■ | | |
| ■ | ■ | 8 | | | ■ | | 9 |
| 10 | | | | | | 11 | ■ |
| ■ | ■ | | 12 | 13 | 14 | | |

**முன் குறிப்பு : நபிமார்களின் பெயர்களுக்கு பின் வரும் அடைமொழிகள் (அலை), (ஸல்) போன்றவைகள் கட்டங்களில் சேராது.**

**இடமிருந்து வலம்**

1. அகிலத்தாரின் அருட்கொடையாக அனுப்பப்பட்ட நபி (5)
6. மலைகளை குடைந்து வாழ்ந்த சமுதாயத்திற்கு வந்த நபி (3)
10. ஓரினச் சேர்க்கையில் இருந்த சமுதாயத்தை திருத்தவந்த நபி (2)
14. இந்த நபியின் பெயரை இவர்களுக்கு முன் வேறு யாருக்கும் அல்லாஹ் சூட்டவில்லை (3)

**வலமிருந்து இடம்**

2. ஸபூர் வேதம் வழங்கப்பட்ட நபி (3)
3. அல்லாஹ் நண்பனாக்கிக் கொண்ட நபி (5)
11. கடும் காற்றால் அழிக்கப்பட்ட சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட நபி (2)
13. எந்த நபியின் அழகை கண்ட பெண்கள் தன் கைகளை கத்தியால் வெட்டிக் கொண்டனர் (3)

**மேலிருந்து கீழ்**

3. இப்ராஹிம்(அலை) அவர்களுடன் சேர்ந்து கஃபாவை கட்டிய நபி (5)
4. பிறந்ததும் பேசிய நபி (2)
5. மூஸா(அலை) அவர்களுக்கு துணையாக அனுப்பிய தூதர் (3)
8. அளவு நிறுவைகளில் மோசடி செய்த சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட நபி (3)

**கீழிலிருந்து மேல்**

7. 950 வருடங்கள் தஃவா பணி செய்த நபி (2)
9. இப்ராஹிம்(அலை) அவர்களின் மகன்களில் ஒரு நபி (4)
12. பறவைகளின் மொழியனை அறிந்திருந்த நபி யார் (4)
13. இறைவனால் மீன் மூலம் தண்டிக்கப்பட்ட நபி (3)

## விதிமுறைகள்

**1.** விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்
**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628,Jeddah-21438**
அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **ரஜப்** மாதம் **30**-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

**2.** விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

**3.** நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

**4.** ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**5.** பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

**6.** ஆசிரியர் முடிவே இறுதியானது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:8 க்கான பரிசு பெறுபவர் விபரம்

### A. ரஃபீக் அஹமது

**பரிசு பெற்றவர் *மௌலவி. இப்ராஹீம் மதனி* அவர்களைத் தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக்கொள்ளவும் – (050 6625229)**

**குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.**

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:8 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | லி | 1 நூ | 2 பா | த் | தி | மா | ■ |
| ஸ் | 3 அ | ய | ரா | 4 ரு | கை | யா | 5 ஹு |
| பா | த் | வ | ரை | க் | 6 மு | ர் | 7 ய |
| ப் | த | ஞ் | ஹூ | 8 உ | ஸ் | மா | ன் |
| அ | வ் | சு | பூ | ■ | லி | 9 உ | ஈ |
| னு | பா | க | 10 அ | ■ | ம் | ம | ல் |
| ப் | 11 அ | ம் | மா | ர் | ■ | ர் | ரூ |
| 12 இ | பு | ன் | 13 யா | ய் | பி | தை | 14 ஹூ |